# திருநாங்கூர்-செம்பொன் செய்கோயில்

V. R. வரதநாராயண அய்யங்கார்—முதல் தீர்த்த மிராசுதார்.

ஸ்ரீ திருமங்கை யாழ்வாரால் மங்களா ஸாஸனம் செய்யப்பெற்ற திருநாங்கூர் பதினொருதிவ்ய தேசங்களுக்கும், ஒரு ஏகாதச ரத்னமாலைக்கு நடுநாயகக்கல் போல் நடுநாயகமாய் திவ்யதேசங்களின் அமைப்பிலும், ஆழ்வார் பாசுரங்களின் அமைப்பிலும், "நன்னடுவுள்" என்று நடுநாயகமாய்த் திகழ்கிறது, இச் செம் பொன் செய்கோயில்.

மேலும், இத்திவ்யதேசம் ஸ்ரீவைஷ்ண வர்களுக்கு முதல் மூன்றாய்த்திகழும் கோயில், திருமலை, பெருமாள்கோயில் என்ற மூன்று திருப்பதிகளின் முக் கூட்டாய் அமைந்துள்ளது. இதுதான் செம்பொன்செய் கோயிலாய், எம்பெரு மானும் செம்பொன் அரங்கனாய் சேவை சாதிப்பதால் கோயில் ஆகவும், "மின் திகழ் குடுமி வேங்கடமலைமேல் மேவிய வேத நல்விளக்கு'! என்று ஆழ்வார் அருளிய படியாலும் "அல்லிமாமலராள் தன்னொ டும் அடியேன் கண்டு கொண்டு அல்லல் தீர்ந்தேனே" என்று "அலர்மேல் மங்கை உறை மார்பா" என்பதற்கு இணையாய், திருவேங்கட முடையானாகவும், முதலில், "பேரணிந்து உலகத்தவர் தொழுதேத் தும் பேரருளாளன்" என்றும் முடிவில் "வானவர் கோனைக்கண்டமை சொல்லும் மங்கையார் வாள் கலிகன்றி" என்றும் ஆழ்வார் அனுபவம் இருப்பதால், "பெருமாள்கோயில்" ஆகவும் திகழ்கிறது.

இந்தத் திவ்யதேசத்தை அனுபவிக் கும் போது ஆழ்வாருடைய திருவுள்ளம் அஹமன்னம்.... அஹமன்னம்." என்ற முக்தாத்மாவினுடைய அந்தமில்பேரின் பத்தில் ஆழ்ந்திருந்த படியை ஆழ்வா ருடைய "கண்டுகொண்டு உய்ந்து ஒழிந் தேன்." வாழ்ந்தொழிந்தேன், அல்லல் தீர்ந்தேன், வணங்கி நான் வாழ்ந்தொழிந் தேன் - எம்பெருமானும் இங்கு "வளங் கொள் பேரின்பம் மன்னி நின்றான்" என்கிற பாசுரங்கள் ஒலிக்கின்றன.

மேலும் இத்திவ்யதேசத்து ஸ்ரீ வைஷ்ணவர்களை, "சிறப்புடை மறை யோர்," திடமொழி மறையோர்," "திசை முகன் அனையோர்", "செல்வநான் மறை யோர்" "செஞ்சொல் நான்மறையோர் தென்திசைத்திலதம் அனையவர்" தெளிந்த நான் மறையோர்" என்று அதிகாரிகளைத் தனித்தனியே விசேஷித்துக் கொண்டாடு கிறார் ஆழ்வார்.

மேற்கூறிய பெருமைகளுடைய இத் திவ்யதேசத்தில் முதல் தீர்த்த மரியாதை கள் பெற்றுள்ள "ஸ்ரீ கோமடம் அழகிய சிங்கர்" என்ற வம்சஸ்தர்களுள் அடியே னும் ஒருவன் என்று பெருமைப்படு கிறேன். இத்திவ்யதேசத்தில் இரண்டா வது தீர்த்த மரியாதைகள் இங்கே நித்ய வாஸிகளான திருக்கோட்டியூர் நம்பி வம்சஸ்தர்கள் அனுபவிக்கிறார்கள்.

இத்திவ்யதேசத்து உத்ஸவ விவரங்கள்:

(i) ப்ரஹ்ம உத்ஸவம்: ப்ரதிவருஷம் ஐப்பசி மீ ஸ்வாதியில் தீர்த்த வாரி - அதற்கு முன் 9 நாட்கள் - நாலாயிரம் அருளிச்செயல் வேதபாராயண கோஷ்டியுடன் நடைபெறுகிறது.

(ii) அத்யயன உத்ஸவம்: தை அமா வாஸைக்கு மறுநாள் திருமங்கை யாழ்வார் எழுந்தருளி மங்களா ஸாஸனம் செய்து, திருப்பல் லாண்டு தொடங்கியவுடன் ஒரே வேளையில் ஸங்க்ரஹமாக நாலா யிரமும் சேவித்து சாத்துமறை ஆஸ்தான உத்ஸவம் நடை பெறுகிறது.

(iii) திருநக்ஷத்ரம்: ப்ரதி மாஸமும் "ஸ்வாதி" திருநக்ஷத்திரத்திற்கு, திருமஞ்சனம் ஆஸ்தானம், திருப்பல்லாண்டு திருப்பாவை, ஸ்தலப்பாசுரங்கள் சேவித்து ஆஸ்தானம் கோஷ்டி நடை பெறும்.